ஆக்குகிறபோது அரசுக்கு ரெக்கரிங் எக்ஸ்பெண்டிச்சர் ஆண்டுக்காண்டு—ஊதியம் தர வேண்டும் என்ற அடிப்படையில்—அதிகமாக ஏற்படுகிறது. எனவே நிதிநிலைமைக்கேற்ப இந்தப் பிரச்சினைகளை ஆய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கின்ற பெண்கள் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தி பெண்கள் பட்டு வருகிற இடர்பாடுகளுக்கு பரிகாரம் காணப்பட வேண்டும் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

லால்குடி தொகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கங்கள்.

598—(* வினா எண் 850) திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதியில் உள்ள பூவாளூர் மற்றும் பு. சங்கேந்தி, பத்மசால கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம், பூவாளூர் வேலாயுதம் பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் ஆகியவைகளில் சுமார் ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவற்றை கொள்முதல் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) மேற்கண்ட 3 நெசவாளர் சங்கங்களிலும் 1985 ஆம் ஆண்டு மார்ச் வரை ஏறக்குறைய 6,97,469 ரூபாய் மதிப்புக்கு கைத்தறித் துணிகள் தேங்கியிருந்தன. சமீபத்திலே கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்த காரணத்தால் சுமார் 3¼ இலட்சம் ரூபாய்க்கு இப்போது தேக்கம் இருக்கிறது.

1987 மே 5]

திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இந்தக் கேள்வியை 1985 ஆம் ஆண்டு கேட்டிருக்கிறேன். அதற்கு 1987 ஆம் ஆண்டிலே பதில் சொல்லுகிறார்கள். அப்படி பதில் சொல்லும்போது கூட தேங்கியிருக்கிற துணிகளைக் கொள்முதல் செய்வதிலேயும் பிரச்சினைகள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே இவற்றை எல்லாம் கருத்திலே கொண்டு, மிக விரைவாக தயாரித்திருக்கிற கைத்தறித் துணிகளை அரசு கொள்முதல் செய்யவும், கூடுமான வரையில் கேட்கிற கேள்விகளுக்கு மிக விரைவில் பதில் சொல்லவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 12—3—1985-ல் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். 10—4—87-ல் பதில் வந்திருக்கிறது. இதிலே என்னுடைய அலுவலகத்திலே தாமதம் கிடையாது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவு சங்கங்களிலே, பிரைமரி சங்கங்களிலே துணி தேக்கம் ஏற்படுகிறபோது, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அப்போதைக்கப்போது கொள்முதல் செய்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன 3 சங்கங்களிலே பாதி அளவுக்கு கொள்முதல் செய்திருக்கிறது. மீதி இருப்பதையும் கொள்முதல் செய்ய கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. கி. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாதித் துணிகளைக் கொள்முதல் செய்ததற்காக அரசுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். பேரவைத் துறையைப் பொறுத்தவரையில், பதில் வந்தவுடனே இங்கே போட்டிருந்தாலும், கேள்வி கேட்டு, பதில் தராத அந்தத் துறையின்மீது எந்த வகையில் நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதையும், கேள்விகளுக்கு விரைவாக எப்படி பதில் தர இருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை)